செ.வெ.எண்:916/2016 நாள்: 29.12.2016

# புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# அரசு சிறப்பு கைத்தறி கண்காட்சி - EXPO – 2016 – 17

# பத்திரிக்கைச் செய்தி

நாகர்கோவிலில் 30.12.2016 முதல் 11.01.2017 முடிய சிறப்பு கைத்தறி கண்காட்சியினை சிறப்பாக நடத்திட இந்திய ஜவுளித் துறை மற்றும் தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இச்சிறப்பு கைத்தறி கண்காட்சியினை 30.12.2016 முதல் 11.01.2017 முடிய 13 தினங்கள் நாகர்கோவில் சரகத்தில் நடத்திட கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் கைத்தறி ஜவுளிகளையும், புதிய இரக ஜவுளிகளையும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி உடனுக்குடன் விற்பனை செய்யும் பொருட்டும், இதனால் நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் வழங்கி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் இதுபோன்ற சிறப்பு கைத்தறி கண்காட்சிகளை நடத்திட மத்திய, மாநில அரசுகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி நாகர்கோவில், இராமவர்மபுரத்தில் அமைந்துள்ள சுமங்கலி திருமண மண்டபத்தில் 30.12.2016 முதல் 11.01.2017 முடிய 13 தினங்களுக்கு மாநில அளவிலான சிறப்பு கைத்தறி கண்காட்சி (Special Handloom Expo) நடைபெறுகிறது. இக்கண்காட்சியில் 30-க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் அமைக்கப்பட உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், தமிழகத்தின் இதரப் பகுதிகளில் இருந்தும் குறிப்பாக ஈரோடு, சென்னிமலை, சேலம், மதுரை, விருதுநகர், பரமக்குடி, கடலூர், திருநெல்வேலி, திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலிருந்தும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கண்காட்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளன. இக்கண்காட்சியில் படுக்கை விரிப்புகள், ஜமுக்காளம், தலையணை உறை, திரைச்சீலைகள், லுங்கிகள், துண்டு ரகங்கள், டர்க்கி டவ்வல்கள், வேட்டிகள், சேலை ரகங்கள், கேரளா செட்முண்டு சேலைகள், செயற்கைப்பட்டு சேலை ரகங்கள், காட்டன் சேலைகள் மற்றும் பட்டு சேலைகள், பட்டு வேட்டிகள், அங்கவஸ்திரம் உட்பட ஏராளமான கைத்தறி ஜவுளி ரகங்கள் விற்பனை செய்யப்பட உள்ளன. இக்கண்காட்சியில் ரூ.50.00 லட்சம் மதிப்புள்ள ஜவுளிகள் விற்பனை செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் விற்பனை செய்யப்படும் கைத்தறி ஜவுளிகளுக்கு 30% அரசு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

உதவி இயக்குநர்
கைத்தறி மற்றும் துணிநூல்
நாகர்கொவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.